1993 ஏப்ரல் 30]

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புங்கங்குழியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என் தொகுதி மக்களின் சிரமத்தைத் தீர்க்கும் வகையில் எனது பணிவான கோரிக்கையை ஏற்று அரியலூர் தொகுதி, புங்கங்குழி வருவாய் கிராமத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க ஏற்பாடு செய்து தந்த எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசுக்கும், எங்கள் உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி, இந்த வங்கியை அமைக்க அரசு ஆணை பிறப்பித்து பல மாதங்கள் ஆகியும், எந்தவிதமான செயல் வடிவமும் இன்னும் கொடுக்கப்படவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் அதற்கான ஏற்பாடுகளை விரைவுபடுத்தி விரைவில் அங்கு வங்கி அமைக்க ஆவன செய்வாரா? அந்த வங்கி அமையும் நேரத்தில் அந்த வங்கியை அமைச்சர் அவர்களே வந்து திறந்து வைத்து உதவி செய்து நடத்திக் கொடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தலைமையிலே நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 554, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

554—

சங்ககிரியில் தொழிலாளர் நீதிமன்றம்.

*14104—டாக்டர் வெ. சரோஜா:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரியில் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

[1993 ஏப்ரல் 30

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைர்வ அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தச் சூழ்நிலையிலும், தொழிலாளர் நலம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற தெளிவான கருத்தோடு மாநில தொழிலாளர் மறுவாழ்வு நிதியை ஏற்படுத்தி அதற்காக 50 கோடி ரூபாயை ஒதுக்கித்தர வேண்டும் என்று மத்திய அரசுக்கு வேண்டு கோள் விடுத்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் வரும் ஆண்டிலாவது இதை அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்ககிரிக்கான தொழி லாளர் நீதிமன்றம் தற்போது சேலம் மாவட்டத்திற்கு புதிதாகத் துவங்கப்பட்டு சேலம் நகரத்திலே செயல்பட்டு வருகிறது. எனவே, சங்ககிரிக்காக தனியாக தொழி லாளர் நீதிமன்றம் துவக்கப்பட வேண்டிய அவசியம் எதுவும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 555, திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

555—

கிணத்துக்கடவு தென்னை நார் தொழிற்சாலை.

*10974—திரு. நா. சா. பழனிசாமி :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு தொகுதியில் தென்னை நார் தொழிற்சாலைகளிலிருந்து பெறும் கழிவான 'Coir Pith' சாலை ஓரங்களில் கொட்டி நெருப்பு வைக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) அதை பயனுள்ள பொருளாக மாற்ற அரசு ஒரு தொழில் நுட்பத்தைக் கண்டறியுமா?